1990 மார்ச் 22] [திரு. இ. புகழேந்தி]

இதற்கு முன்பெல்லாம் பாரதப் பிரதமர் 13, 14 முறை வருகிறபோது விமான நிலையத்தின் ஒரு பெரியபகுதிக்கு காமராஜர் பெயரை வையுங்கள் என்று ஒரு விண்ணப்பம் கூட இந்தத் தமிழ்நாட்டில் கொடுக்கப்படவில்லை. அந்த எண்ணமே தோன்றவில்லை என்பதற்காக நாம் வருத்தப்படுகிறோம்: வேதனைப்படுகிறோமே தவிர வேறல்ல. இந்த அரசு பெருந்தலைவரை மதிக்கிற அரசு, போற்றுகின்ற அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே 'ஃபெரி சர்வீஸ்'—படகு போக்குவரத்துத் துறை அமைப்பதற்கான நிலையைத் தந்திருப்பதாலும், ஈஸ்ட் கோஸ்ட் ரோடு—கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பினை கடலூர் வரை நீட்டித்திருப்பதாலும், கடலூர்மா நகரிலே முக்கிய கேந்திரமாக இருக்கிற பெண்ணையாற்றுப் பாலத்தை, புதுவை மாநிலத்தை இணைக்கின்ற அந்தப் பாலத்தை, பழுதடைந்து வயதாகி என்று விழுமோ என்ற நிலையில் இருக்கிற அந்தப் பாலத்தை மாற்றி புதிய பாலம் கட்டக்கூடிய வகையிலே இருப்பதாலும் கடலூர் சிப்காட் பகுதியிலே விற்பனை வரி சலுகையினை தொழில் முனைவர்களுக்கு வழங்கி இருப்பதாலும், 'ஸ்மால் பிரிட்ஜஸ்'-சிறிய பாலங்கள் என்பதிலே கடலூர் சிங்காரத்தோப்பு பாலத்தையும் சேர்த்து வைத்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை இருப்பதாலும், கடலூரிலே 'கோர்ட் பில்டிங்' கட்டுவதற்கு புரொப்போசல் போட்டிருக்கிற காரணத்தாலும் கடலூரிலே ஒரு ரயில்வே மேம்பாலம் அமைக்கிற நிலைமை இருக்கிற காரணத்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழர் வாழ்வுக்கு உத்தரவாதப் பத்திரம்: பைந்தமிழர் பாசறை: கொள்கையாளர் கோட்டம்: மாவீரர் தலைமை தாங்கும் தமிழர் சேனை என்பதை எடுத்துச் சொல்லி, மக்கள் அத்தனை பேரும் வரவேற்கின்ற மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்ற போற்றுகின்ற நிதிநிலை அறிக்கையை இந்த நாட்டிற்குத் தந்திருக்கிற எங்களுடைய தானைத் தலைவர், எங்களுடைய தாயனையத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்கள்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1989-90-ஆம் ஆண்டிற்கான இறுதித்துணை நிதி நிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவைக்கு 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் அளிக்க வேண்டும் என்று ஏற்கனவே

அறிவித்ததற்குப் பதிலாக 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அளிக்கவேண்டும் என்று ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 16-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 13-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

16-00 மணி

16-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

வரவு-செலவுத் திட்டம், 1990-91—பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி. தொடங்குபவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 94 நிமிடங்கள் இந்த நிதிநிலை அறிக்கையை சளைக்காமல், கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் இங்கே நின்று அவர்கள் படித்தார்கள். அப்படிப் படித்ததையெல்லாம் நான் வரவேற்கிறேன். வருவாயைப் பொறுத்தவரையில் முதலாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு மத்திய அரசு மூலமாக அன்று ஒதுக்கிய பணம் 2,500 கோடிதான். நான் அப்போதும் எம்.எல்.ஏ.வாக இருந்தேன். இன்றைக்கு தமிழகத்தின் வருமானம் ஆண்டிற்கு கிட்டத்தட்ட 4,397.46 கோடி ரூபாய் என்று வந்திருக்கிறது. வருமானம் எவ்வளவு கோடி வந்திருந்தாலும் கூட, செலவு 4,814.09 கோடி அளவிற்கு இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு வருமானத்தை தேடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர்களுக்கும் தெரியும். இருந்தாலும் கூட, காங்கிரஸ் கட்சி ஆட்சியின் போது கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலம் கள் என்றால் என்ன, மது என்றால் என்ன, சாராயம் என்றால் என்ன என்று தெரியாமல் இருந்த, இளைஞர்களுக்கு எல்லாம் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் திறந்து விட்டு, ஒரு சமுதாயமே அழிகிற நிலை ஏற்கனவே ஏற்பட்டது. மாண்புமிகு